www.tamilarangam.net

# மாவீரர்களான முன்னாள் துரோகிகளும் துரோகிகளான முன்னாள் மாவீரர்களும்

### வாடிக்கையாகும் புலிகள் இயக்க வேடிக்கை

எதிரி யார்?நண்பன் யார்? எனப்புரியாது தமிழ்மக்களின் வாழ்க்கையோடு விளையாடும் புலிகளையும், புலி வால்களையும் இனம் காண்போம். உலகிலேயே நட்புசக்திகள் இல்லாத அபூர்வ விடுதலை இயக்கம் விடுதலைப்புலிகள் தான் என்ற மறுக்கமுடியாத உண்மையை உணர்ந்து மாற்றத்தை ஏற்படுத்துமாறு வேண்டுவோம்.

**புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பே!**
அமெரிக்க அரசு செயலகம் அறிவிப்பு

**புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு இல்லை!**
இந்திய மத்திய மாநில கட்சிகள் அறிவிப்பு

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்காதரவாக செயற்படும் நிரந்தரகுடியுரிமை பெற்றவர்கள் குடியுரிமை பறிக்கப்படுவர்!**
மலேசிய அரசு அறிவிப்பு

**புலிகளின் சர்வதேச பயங்கரவாதத்தை ஒடுக்க ஸ்கொட்லாண்ட்யார்ட் உதவும்!**

**சுவிஸ் புலிப்பொறுப்பாளர் முரளி உட்பட பலர் கைது! பாதிக்கப்பட்ட மக்களின் புகார்களின் அடிப்படையில் கைது செய்தோம்.** சுவிஸ் அதிகாரி

**தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாத செயல்களைக் கண்டிக்கிறோம்!** ஐரோப்பிய யூனியன்

**கனடாவில் வன்முறைக் கலாச்சாரத்திற்கு தலைமை தாங்கிய உலகத்தமிழர் இயக்கத் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் கைது! "தமிழர்களுக்கெதிரான நடவடிக்கையல்ல"** கனேடிய அமைச்சர் அறிவிப்பு.

இனிய தமிழ் மக்களே!
ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும் பல காரணிகளில் சர்வதேச அபிப்பிராயமும் உலகமக்களின் தார்மீக ஆதரவும் மிக அவசியம் என்பது சிறுபிள்ளைக்கு கூட தெரிந்த விடயம். மேலே வாசித்த பத்திரிகைத் தலைப்புச் செய்திகள் நமக்கு எதைக் காட்டுகிறது? புலிகளின் சர்வதேச மட்டத்திலான வன்முறைக் கலாச்சார நடவடிக்கைகளால் தமிழ்மக்கள் மீதான கொஞ்ச நஞ்ச உலக ஆதரவும் கெட்டுவிட்டது என்பதைக் காட்ட வில்லையா?இனிய தமிழ்மக்களே! உலகநாடுகளில் எமது போராட்டத்திற்கு எதிர்ப்புகள் ஏற்பட சந்திரிகா அரசின் பிரச்சாரம் தான் காரணம் என விமர்சிக்கும் நாம் ஒருகணம் நாமும் காரணமா? என சிந்தித்துப் பார்த்தால் என்ன? மற்றவர்களையே விமர்சித்துக் கொண்டிருக்கும் தமிழினமே! எமது தவறுகளையும் சுயவிமர்சனம் செய்து தமிழ்மக்களின் விடிவிற்கு வழிசமைக்க ஏன் முயற்சிக்ககூடாது?

## வெளிநாடுகளில் புலிகள் பரப்பிய வன்முறைக் கலாச்சாரம்

இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் அரசாங்கங்கள் அவசரகால தடைச்சட்டத்தை பிரகடனப்படுத்தி செய்தி தணிக்கையை அடிக்கடி செய்ததேயன்றி இதுவரையும் ஒருபத்திரிகையையும் தடை செய்ததாக செய்திகள் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் தடைசெய்து விட்ட பத்திரிகைகள் தான் எத்தனை? எத்தனை? எண்பதுகளின் இறுதியில் மாற்று அரசியல் இயக்கங்கள், விடுதலை இயக்கங்களை அழித்ததுமல்லாமல் சுயமாக சிந்திக்கத் தூண்டும் எழுத்தாளர்களை பத்திரிகையாளர்களை, கவிஞர்களை, தலைமைதாங்கக்கூடியவர்களை கொன்றும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு வற்புறுத்தியும் தாம் பயங்கரவாதிகள் தான் என்பதை நிருபித்தனர் புலிகள். வெளிநாடுகளில் பத்திரிகையாளர்களை மிரட்டினார்கள். தாயகம் பத்திகையாளரை கொல்ல முயற்சித்தார்கள். தாயகம் பத்திரிகை வினியோகிக்கும் இளைஞரைத் தாக்கினார்கள். வானொலி அறிவிப்பாளர் இளையபாரதி பலமுறை மிரட்டப்பட்டார். பணிய மறுத்தார் என்பதால் புலிகளால் சுடப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பினார். மஞ்சரி ஆசிரியர் ஜெயராஜ் தாக்கப்பட்டார், பலமுறை கொலைப்பயமுறுத்தல் விடுக்கப் பட்டார். பத்திரிகையை தடைசெய்வதாக அறிவித்தார்கள். விற்பனையாளர்களை மிரட்டியும் இடையூறுகள் கொடுத்தும் மஞ்சரியை நிறுத்தினார்கள் புலிகளும், புலிவால்களும். கனடாவில் தமிழை வளர்க்க அத்தியாவசிய தேவைகளில் ஒன்று நூலகம். தமது சொந்தப்பணத்தையும் மக்களின் நன்கொடைகளின் உதவியுடனும் தேடகம் நூலகத்தை நிர்வகித்து வந்தனர் உண்மையான தமிழ்ப் பற்றுள்ள தமிழ் இளைஞர்கள். அத்தேடகம் நூலகத்தை எரித்தவர்கள் வேறுயாருமல்ல, தமிழைவளர்க்கிறோம் தமிழினத்தின் மேம்பாட்டுக்காக உழைக்கிறோம் என வாய்கிழிய கத்தி கனேடியஅரசின் உதவிப்பணம் பெற்று (1990முதல் $4.3மில்லியன் உதவி, ஆதாரம், MACLEAN'S/APRIL 29.1996) அதில் ஒருபகுதியை தமது வயிறுவளர்க்கப் பயன்படுத்தும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவீர்கள். இந்த முன்மாதிரியைப்பின்பற்றி புலிகளின் கடந்தகால தூரநோக்கற்ற அரசியல் முடிவுகள், மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு தேசியத்தலைவர்? பகிரங்கமன்னிப்புக் கோரவேண்டும் என நிர்ப்பந்திப்போம். இதன் மூலமாவது புலிகள் தமக்கு புதிய இரத்தம்பாய்ச்சி தமிழீழ, சர்வதேசமக்கள் மத்தியில் போராட்டம் மீதான நம்பகத்தன்மையை ஏற்படுத்தி விரைவான விமோசனத்திற்கு வழிசமைக்குமாறு வேண்டுவோம். இல்லையேல் சுயகௌரவம் பாராது தமிழீழத்தில் ஜனநாயக சூழ்நிலையை உருவாக்கி புதிய தலைமைகள் உருவாக வழிசமைக்குமாறு புலிகளைக் கோருவோம்.

**தமிழீழமக்கள் மீதான புலிகளின் அடக்குமுறைகளை, ஜனநாயக விரோத செயற்பாடுகளை நிறுத்துமாறு புலம்பெயர்ந்த தமிழர்களாகிய நாம் அழுத்தம் பிரயோகிப்போம்.**

**உலகநாடுகளில் புலிகளினதும், புலிவால்களினதும் வன்முறைக் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்போம்.அதன்மூலம் தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் மீண்டும் பரவும் வகை செய்வோம்.**

May 1996

புலம் பெயர்ந்த சமாதான விரும்பிகள்

குறிப்பு : இனிய தமிழ் மக்களே! புலிகளின் வன்முறைக் கலாச்சாரத்தால் சுதந்திரகருத்துப் பரிமாற்றத்திற்கு புலம்பெயர்ந்த நாடுகளில் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களை நீங்கள் அறிவீர்கள். எனவே இப்பிரசுரத்தை இயன்றளவு போட்டோ பிரதிகள் செய்தோ, மறுபிரசுரம் செய்தோ, கருத்துப்பரிமாற்றத்திற்கு உதவுமாறு வேண்டுகிறோம்.

### சமர்ப்பணம்

தமிழீழவிடுதலைப்புலிகளின் கொடிய வன்னிக்காட்டு வதைமுகாமில் ஆறு வருடங்களுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டிருக்கும் பெண்கள், மாணவர்கள், அரசஊழியர்கள், உட்பட சுமார் நாலாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நினைவு கூர்ந்து இப்பிரசுரத்தை சமர்ப்பணம் செய்கிறோம்.

www.tamilarangam.net

உலகத்தமிழரும், தமிழீழச்சங்கத்தினருமே! யாழ்ப்பாணத்தில் பொதுநூலகத்தையும் ஈழநாடு காரியாலயத்தையும் எரித்த அரசபயங்கரவாதிகள் காமினி திசநாயக்க கோஷ்டியினர். ""கர்மவினை அவர்களை சும்மாவிடவில்லை அதனால் அவர்கள் படுகொலை செய்யப்பட வேண்டியவர்களே" எனச் சொன்னார்கள் புலிகள். கனடாவில் தேடகம் நூலகத்தை எரித்தார்கள்! பாரிஸில் ஈழநாடு காரியாலத்தை குண்டுவீசி எரித்துச் சாம்பலாக்கினார்கள்! பண்பாட்டுப் படுகொலைகள் புரிவதில் தமிழன் யாருக்கும் சளைத்தவன்னல்ல என்பதை சர்வதேச மட்டத்தில் நிருபித்து தமது தனிநபர் பயங்கரவாதத் தாகத்தை தீர்த்ததுமல்லாமல் கர்மவினைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் புலிகள். ஆபத்திலிருந்த பிரபாகரனை எதிரியிடமிருந்து காப்பாற்றி ஆதரவு செய்த பாரிஸ் சபாலிங்கம் புலிகளின் தவறுகளை விமர்சித்து மக்களை சிந்திக்கத் துாண்டினார் என்பதால் மனைவி பிள்ளைகளுக்கு முன்னால் ஈவிரக்கமின்றி சுடப்பட்டு இரத்த வெள்ளத்தில் மிதக்க விடப்பட்டார். எதிரிகளுக்கு எதிராக மட்டுமே திருப்ப வேண்டிய துப்பாக்கிகளை சகஇயக்க முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு அண்டைநாடுகளிலும் உபயோகித்த புலிகள், தொடர்ந்து தமிழக இந்திய மக்களுக்கெதிராகவும் திருப்பினார்கள். முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தியை கொன்றதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு மிக மிக அவசியமான இந்திய, தமிழகமக்களின் தார்மீக ஆதரவை தமிழீழமக்கள் இழக்க காரணமானார்கள். ஒருகாலத்தில இலங்கைத் தமிழரின் ஆயுதப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தேர்தலில் வாக்குகளைக் குவிக்க எண்ணிய இந்திய தேசிய, மாநில கட்சிகள் புலிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து புலிகளின் பயங்கரவாத செயல்களைக் கண்டித்து, தமிழ்மக்களுக்கு அநுதாபம் மட்டும் காட்டி வாக்குகள் குவிக்க எண்ணிய நிலைக்கு காரணம் யார்?

## முதல்வர் கலைஞர் காலில் புலிகள் விழுவார்களா? ரஜனியின் நிகழ்ச்சிகளில் மாவீரர்கள் ரகளை செய்வார்களா?

1986ல் அனைத்து இயக்கங்களுக்கும் நிதிஉதவி செய்ய அழைப்பு விடுத்தார் கலைஞர் கருணாநிதி. நிதியை வாங்க மறுத்து கலைஞரை அவமதித்தனர் புலிகள். அண்டை நாட்டு அரசியலில் அநாகரிகமாக தலையிட்டனர். விளைவு தமிழர்களுக்கு ஆதரவு-புலிகளுக்கு எதிர்ப்பு என்பது தி.மு.க வின் இன்றைய நிலைப்பாடு கனடா, சுவிஸ் போன்ற நாடுகளுக்கு கலை நிகழ்ச்சி செய்ய வந்த ரஜனியை அவமதித்து இலங்கைத்தமிழனின் பணம் இந்தியத்தமிழனுக்குப் போவதா? என மேதாவிலாசமாக கேட்டு கலைநிகழ்ச்சியை பகிஸ்கரிக்குமாறு வேண்டினர் புலம்பெயர்ந்த மாவீரர்கள். இன்று ரஜனி வந்தால் இதே கேள்வியை கேட்கும் திராணி இவர்களுக்கு உண்டா? தமிழக அரசியல் கட்சிகளும் மக்களும் விடுதலைப் போராட்டத்திற்கு செய்த உதவிகள் இவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது. நண்பர்களை உருவாக்காது விட்டாலும் எதிரிகளையாவது உருவாக்காது விடவேண்டும் என்பதை புலிகள இனிமேலாவது உணர்வார்களா?. தமிழ்மக்களின் விடுதலைக்காக போராடுவதாக கூறிக்கொண்டு உலகமக்களின் நலன்களுக்கு விரோதமாக போதைப்பொருட்களை கடத்துகின்றார்கள் புலிகள், அதற்கு ஆதாரங்கள் இருப்பதாக கூறுகின்றன சர்வதேச அரசுகள். எனவே இனிய தமிழ்மக்களே எதிரிகள் மட்டும் எமது விடுதலைக்கு குழிபறிக்கவில்லை, நமக்கு நாமே குழிபறிக்கின்றோம் என்பதை யாராவது மறுக்க முடியுமா? கனடாவாழ் புலம்பெயர்ந்த தமிழர்களே! சுயலாபத்திற்காக விடுதலைப்போராட்டத்தையும் புலிகளையும் ஆதரிப்பதாக வேஷம் போட்டுள்ள முன்னாள் துரோகிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் இனம் காணுவோம். வன்முறைக் கலாச்சாரத்தை கனடாவில் பரப்பி தமிழர்களின் மானத்தையும், விடுதலைக்கெதிரான உலகஅபிப்பிராயத்தையும் உருவாக்கும் அருவருப்பான தமிழினத் துரோகிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் துார விலக்குவோம்.

## முன்னாள் துரோகிகளும் பிழைப்புக்காக விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவு போல் நடிப்பவர்களும

துரோகி சாம் துரைசாமி : தமிழீழச்சங்கத்தலைவர், யூ..என்.பி அரசாங்கம் தமிழர்களை கொன்று குவித்து வருகின்ற காலத்தில் அந்த அடக்குமுறை அரசின் எலும்புத்துண்டுக்காக சிங்கள மந்திரியின் காலணிகளை நக்கியவண்ணமிருந்தவர்.நட்புறவு பாராட்டவேண்டிய கனேடிய பொலிஸாரை பழிவாங்கும் எண்ணத்துடன் பொதுக்கூட்டத்திற்கு வரவழைத்து அவமதிக்க முயற்சித்தவர். சிங்கள மந்திரியின் வால்பிடித்த காலத்திலோ அல்லது இன்றோ சிங்களப் பொலிசாரை அழைத்து விவாதிக்கும் திராணி இவருக்கு உண்டா? புலிவாலை இறுக்கமாக பிடிப்பதை உறுதிப்படுத்தி தன்வயிறு வளர்க்க நினைத்து கனடாவில் நிலவும் ஜனநாயக சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்ததுமல்லாமல், தமிழ்மக்களின் வாழ்க்கையோடு விளையாடும் துரோகி துரைச்சாமியின் சிறுபிள்ளைத்தனத்தை இனியும் அநுமதிக்கலாமா? அண்மையில் தனது நெருங்கிய உறவினர் கொழும்பில் கைது செய்யப்பட்டவுடன் மந்திரிகளின் செயலாளர்களுடனும், பாதுகாப்பு அதிகாரிகளுடனும் கெஞ்சி மன்றாடினாராம் இந்த துரோகி துரைச்சாமி. இவரின் மாவீரர் வேஷத்தை இனியும் அநுமதிக்கலாமா?

துரோகி இராசரத்தினம் : எழுபதுகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வடபகுதி அமைப்பாளராக இருந்து பின்பு சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன முன்னணி அரசு அமைத்தவுடன் அதற்கு ஆதரவாக செயற்பட்ட சண்டிலிப்பாய் கு.விநோதன் தமிழினத் துரோகியென புலிகளால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொல்லப்பட்டார். அந்த துரோகி விநோதனின் காட்டிக்கொடுப்புக்களுக்காக கிடைத்த சிங்கள ஆட்சியாளர்களின் பிச்சைப்பணத்தில் ஒருபங்குக்காக விநோதனின் காலைப்பிடித்து வளர்ந்தவர்தான் இந்த துரோகி இராசரத்தினம் கொழும்பில் சந்திரிக்கா அரசுக்காதரவாக செயற்பட்டு தனது தொழிலையும் வளர்த்து வந்த விநோதனுடன் தொழில்முறைப் பங்காளாராகவும் இருந்து பணம் சம்பாதித்தவர் இந்த இராசரத்தினம். கனடாவில் மாவீரராக தன்னைக் காட்ட மற்றவர்கள் எழுதிய புத்தகங்களைத் தொகுத்து தேசியத்தலைவரை? குளிர்விக்க அவரின் புகைப்படமும் போட்டு நூல்வெளியீடு வேறு நடத்தினார். கொல்லப்படுவதற்கு முன் கனடா வந்த துரோகி விநோதனை சந்தித்து விருந்துண்டு தனது உறவை வலுப்படுத்திக் கொண்டவர் இந்த ராசரத்தினம். துரோகி விநோதனுடன் இணைந்து, விடுதலைக்காக போராடிய தமிழ் இளைஞர்களை காட்டிக்கொடுத்தவர். குறிப்பாக குட்டிமணி, தங்கத்துரை தலைமையில் போராடிய இளைஞர் பரயோகசிங்கம் பற்றிய தகவல்களை இராணுவத்திற்கு கொடுத்து பரயோகசிங்கம் தேடப்படும் நபராக மாறவும், பரயோகசிங்கம் குடும்பம் இராணுவத்தின் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படவும் காரணமாயிருந்தவர். பரயோகசிங்கத்தின் தம்பி தயாபரசிங்கம் காந்திய இயக்கத்தில் இணைந்து செயற்பட்டு வந்தார். தயாபரசிங்கம் பற்றிய தகவல்களையும் இராணுவத்திற்கு தெரிவித்தார் இந்த துரோகி இராசரத்தினம். இதனால் ஆத்திரமடைந்த ஊர் இளைஞர்களினால் நையப்புடைக்கபட்டார். இவரின் மாவீரர் வேஷத்தை தொடர்ந்தும் நாம் அனுமதிக்கலாமா?'

துரோகி சிற்றம்பலம் : தமிழீழச் சங்க பிரமுகரும் முன்னாள் ஆசிரியருமான சிற்றம்பலம் சிறிமாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னணி வால்களில் ஒருவராக செயற்பட்டவர். அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த மந்திரி துடாவையின் வருகையை பகிஸ்கரிப்புச் செய்தனர் தமிழ் உரிமைக்காக போராடியவர்கள். விடுதலைப்போராளிகளின் வேண்டுகோளை மதிக்காமல் தமிழினத்திற்கு விரோதமாக மந்திரி துடாவையை வரவேற்கச் சென்று துரோகம் புரிந்தவர்தான் இந்த சிற்றம்பலம். மானிப்பாய் சந்தியில் வைத்து மாலை போட்டு விட்டு பின்பு சுதுமலைச் சந்தியிலும் மந்திரிக்கு மாலை அணிவித்தார். ஏன் என வினாவிய மாணவர்களுக்கு அப்போது தான் மந்திரி என்னை ஞாபகத்தில் வைத்திருப்பார் சில காரியங்களை சாதிக்கலாம் எனக்கூறி சிங்கள ஆட்சியாளர்களின் எலும்புத்துண்டுக்காக அலைந்த முன்னாள் துரோகியான சிற்றம்பலம் இன்று மாவீரர் ஆகியதெப்படி? பிழைப்புக்காக வெளிநாடு வந்த சிற்றம்பலம் ஆரம்பத்தில் அகதி அந்தஸ்து கோரியவர்களுக்கு வழக்கு எழுதிய போது புலிகளை பயங்கரவாதிகளென்று எழுதிய வழக்குகள் தான் எத்தனை? வழக்கு எழுத வந்த தமிழ்ப்பெண்களுடன் தனது பாலியல் வக்கிரங்களை தீர்க்க எடுத்த முயற்சிகள் எத்தனை? நான்கு சுவர்களுக்குள் வாங்கிய செருப்படிகள் தான் எத்தனை? (உஷ்,..........உஷ்......புலிகளின் பெண்கள் பிரிவான சுதந்திரப்பறவைகள் அறிந்தால் மின்சாரக்கம்பம் தான்) இன்று தமிழீழச் சங்கத்தில் கொழுத்த சம்பளம் கிடைத்தவுடன் மேடைகளில் மாவீரர் ஆக விடுதலை முழக்கம். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உண்மையான ஆதரவு இருந்தால் கனடாவிலும், அமெரிக்காவிலும் மேல்படிப்பு படிக்கும் பிள்ளைகளை போராட அனுப்பாதது ஏன்?

சந்தர்ப்பவாதி சிவா சின்னத்தம்பி : திருமணவீடொன்றில் இவரின் உரையாடலைக் கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நண்பர் ஒருவர் ஏன் பொதுவேலைகளில் போய் வீணாக நேரத்தைக் செலவிடுகிறீர்கள், உங்கை பொதுவேலை செய்கிறவனெல்லாம் தன்சுயலாபத்திற்காக உங்கட திறமையில குளிர்காய நினைக்கினம் எனச் சொல்ல, உது எனக்குத்தெரியாதெண்டில்லை இவர்கள் எல்லாரையும் பற்றி எனக்குத் தெரியும். எனக்கு ஒரு பிஸினஸ்(ஸ்ரீசிவா நகைமாளிகை) இருக்குத்தானே, பிஸினஸ் நல்லாநடக்க வேண்டுமென்றால் இப்படியான பப்ளிசிடி தேவைதானே. காசுகொடுத்து விளம்பரம் செய்வதை விட இது நல்லா வேர்க் அவுட் (work out)பண்ணும் எனக் கூறி தனது சுயரூபத்தைக் காட்டியவர். தமிழீழ மண்ணில் தமிழர்களின் பிணங்கள் விழுந்து வரும்வேளையில் விருதுக்காக அலைந்து விருதுவாங்கும் இந்த சின்னத்தம்பி எழுதிய மூன்றாம்தரக் கவிதையில் "புலியில் பழிபோட எம்மின விசித்திரங்கள், புல்லுருவிகள், பச்சோந்திகள் புறப்படுகின்றன. தாயை, சோதரியை, தமிழன்னையை கூட்டிக்கொடுப்பதற்காக சேவகம் செய்யுதுகள்" என எழுதுகின்றார். புலிகளின் தவறுகளை விமர்சிப்பவர்கள் தாயை சோதரியை கூட்டிக்கொடுக்க சேவகம் செய்பவர் என்றால், சின்னஞ் சிறார்களை போராடவிட்டு விட்டு வெளிநாடு வந்து சொகுசாக வாழ்வது தாயை, சகோதரியை, கூட்டிக்கொடுப்பதுமல்லாமல் மனைவியையும் கூட்டிக்கொடுக்கும் செயலுக்கு ஒப்பானது என்பது இந்த ஆண்மையுள்ள? சிவா சின்னத்தம்பிக்கு புரியவில்லையா?
( மூன்றாம்தர எழுத்தாளர்களுக்கு மூன்றாம் தரமான பதில் கொடுப்பதற்கு வாசிப்போர் மன்னிக்கவும்)
நகைக்கடையில் குளுகுளு ஏ.சி போடவில்லை என்பதற்காக தொழிலாளி ஒருவரை தூஷணை வார்த்தையால் திட்டிய இந்த சிவா சின்னத்தம்பி, "காலம் காலமாக கிளிநொச்சி, வன்னி என கமம் செய்து, ஏர் பிடித்து வாழ்ந்தவர் நாம் இன்று ஏமாந்து போகவில்லை ஊர்மாறி வாழ்கின்றோம் அவ்வளவுதான" என இடம் பெயர்ந்த தமிழர் பற்றி கவிதை எழுதுகின்றார். சிரிப்பாக இல்லை! குறைந்தது ஒருமாதமாவது வன்னி மண்ணிற்குச் சென்று துப்பாக்கி ஏந்தாவிட்டாலும் பரவாயில்லை ஏர்பிடிக்க முடியுமா இந்த வாய்ச்சவடால்காரரால்? இவர் போன்ற சந்தர்ப்பவாதிகள் தமிழ்மக்களின் காதுகளில் பூச்சுற்ற இனியும் நாம் அனுமதிக்கலாமா?

<u>உமாமகேஸ்வரன்</u> : உலகததமிழரின் மாணவர் அணிப் பிரிவுத் தலைவன். சுவிஸில போதைப் பொருள்கடத்தலில் ஈடுபட்டு கனடாவுக்கு புலம் பெயர்ந்தவர். தாயகம் பத்திரிகை விநியோகிஸ்தரை கெனடி சப்வேக்கருகாமையில் கத்தியால் குத்திக் கொல்ல முயற்சித்த சம்பவம் உட்பட கனடாவில் பல

www.tamilarangam.net

வன்முறைச் சம்பவங்களுக்கு காரணமான மாவீரன். பாடசாலை நாட்களில் இருந்து காதலித்த
பெண்ணை கைவிட்டுவிட்டு பெருந்தொகைச் சீதனத்திற்கு ஆசைப்பட்டு ஸ்ரீலங்காவின் தலைநகரான
கொழும்புத் தொழிலதிபரின் பணத்தை மணம்முடித்து மன்னிக்கவும் மகளை மணம்முடித்து விடுதலைப்
புலிகளின் சீதன ஒழிப்புக் கொள்கைக்கு முன்மாதிரி காட்டிய கொள்கைக்குன்றன்.

வசந்தராஜா : சந்திரிகா அம்மையாருடன் உற்ற நண்பனாக இருந்து வெளிநாடுகளில் விருந்துகள்,
களியாட்டங்கள் என சுற்றிய வசந்தராஜா திடீரென மாவீரர் ஆனதெப்படி? நட்பின் அடிப்படையில்
உயர்ந்த பதவியும் பெற்றுக்கொண்ட வசந்தராஜா தனது சுயவிருப்பங்கள் எல்லாவற்றையும் சாதிக்க
முடியாமல் சந்திரிக்காவுடன் முரண்பட்டு பழிவாங்கும் ஒரே எண்ணத்துடன் தனது கலரைமாற்றி மாவீரர்
ஆகிவிட்டவர் இந்த பச்சோந்திராஜா

உருத்திரகுமார் : அந்த பதினான்கு வயதுஇளம் பெண் பத்துவருடங்களுக்கு மேலாக காணாத
பெற்றோரை காணலாம் என கனடா வந்தபோது, ஒருமணிநேரத்திற்கு முன் அவள் தந்தையின்
பூதவுடல் அமெரிக்காச்சிறையில் இருந்து வந்துவிட்டது. அவள் தந்தை அப்புக்குட்டி ஏகாம்பரம்
அமெரிக்கச் சிறையில் மரணத்தை தழுவ காரணமானவர் தான் இந்த உருத்திரகுமார் அகதியாக
வரும்போது கைது செய்யப்பட்டு அமெரிக்கச்சிறையில் இருந்த ஏகாம்பரத்தை விடுவிப்பேன் என
முற்பணமும் வாங்கிவிட்டு ஒருவருடம் இழுத்தடித்ததும்அல்லாமல் குறித்த திகதியில் வழக்குக்குச்
செல்லாமலும் விட்டார் இந்த உருத்திரகுமார். சுரேஸ் வழக்கில் கிடைக்கும் பிரபலத்தில் மயங்கி
கனடாவிலேயே நீண்டகாலம் தங்கும் இவர்தொலைபேசியில் கூட முற்பணம் கொடுத்தவர்களுடன்
உரையாட முடியாத அளவுக்கு பொறுப்பற்று நடக்கிறார். மனைவி பிள்ளைகளின் பிரிவு, நீண்டகால
சிறைவாழ்வு, சட்டத்தரணியின் அலட்சியம் அனைத்தாலும் மனமுடைந்து மரணத்தை தழுவினார்
அப்புக்குட்டி ஏகாம்பரம். உருத்திரமூர்த்தி போன்ற சட்டத்தரணிகளின் பொறுப்பற்ற தன்மைகளால்
தமிழ்அகதிகளின் உயிர்இழப்புக்களை இனியும் நாம் அனுமதிக்கலாமா?

ஈழநாடு பத்திரிகை : பத்திரிகை உலகின் அவமானச்சின்னம். சிங்களஅரசு, யாழ்காரியாலயத்தை
எரித்தபின் அரசின் கொடுமைகளை மேலும் துணிந்து எதிர்த்து எழுதியது யாழ்ப்பாண ஈழநாடு
பத்திரிகை. புலிகளின் குண்டுவீச்சுக்கும், தீவைப்பிற்கும் பின் கீழ்த்தரமாக வால்பிடித்து மக்களை
ஏமாற்றுகின்றது புலம்பெயர்ந்த தமிழனின் ஈழநாடு பத்திரிகை, மணலாற்று இராணுவமுகாம்
தாக்குதலில் 180 புலிகள் பலி! மாத்தையா குழுவினர் காட்டிக்கொடுத்துவிட்டனர் என்கிறது புலிகளின்
செய்தி. மணலாற்றில் கொல்லப்பட்டது புலிகள் அல்ல மட்டக்களப்பில் கைது செய்யப்பட்ட அப்பாவி
இளைஞர்களை மணலாற்றில் சுட்டுப்போட்டுவிட்டு புலிகள் என்கிறது அரசு, என்பது ஈழநாட்டுச்செய்தி.
வெற்றிலைக்கேணியில் கடற்பகுதியில் நடந்த மோதலில் வீரமரணமடைந்த புலிகளுக்கு மரணச்சடங்கு
நடத்தினர் புலிகள். வெற்றிலைக்கேணியில் இராணுவத்திற்கு பலத்த இழப்பு புலிகளுக்கு சேதமில்லை
என்கிறது ஈழநாடு. பேனாமுனை துப்பாக்கி முனையைவிட பலம்வாய்ந்தது. இரண்டும் சிந்தனைத்
தெளிவும் பொறுப்புணர்வும் இல்லாதவர்களால் உபயோகிக்கப்பட்டால் அழிவு மக்களுக்கு தான்.
பிழைப்பதற்கு எத்தனையோ தொழில்கள் உள்ளன, மக்களின் வாழ்க்கையோடு விளையாடுவதும் ஒரு
தொழிலா? புலம்பெயர்ந்த தமிழரின் ஈழநாட்டின் கீழ்த்தரமான வால்பிடிப்பையும் பத்திரிகா
அதர்மத்தையும் இனியும் நாம் அனுமதிக்கலாமா?

இனிய தமிழ் மக்களே!
எதிரிகளுக்கு எதிராகத்தான் நாம் போராடவேண்டும். அது ஆயுதப்போராட்டமாகவோ, அகிம்சைப்
போராட்டமாகவோ இருக்கலாம். நட்புமுரண்பாடுகளை பேசித்தான் தீர்க்க வேண்டும். 80களில்
விடுதலை இயக்கங்கள், தமிழக அரசியல் கட்சிகளுடன் நல்லுறவை ஏற்படுத்தி தமிழக மக்கள் மூலம்
மத்தியஅரசே! தமிழீழ விடுதலைப்போராட்டத்தை அங்கீகரி, ஆதரவுகொடு எனக்கேட்டனர். அது
சரியான அணுகுமுறையாக இருந்தது. ஆனால் அகதி அந்தஸ்துக்கோரி புலம்பெயர்ந்த நாடுகளில்
அந்த அரசாங்கங்களுக்தெகிராக, நீதிமன்றத்திற்கு எதிராக போராட்டம் நடத்துவது, நடத்தத்தூண்டுவது
அரசியலில் சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கையாகும். இது வெளிநாட்டு அரசாங்கங்களையும்,
அந்நாடுகளின் மக்களையும் சினமூட்டி அவர்கள் தமிழர் நலன்களில் அக்கறை காட்டக்கூடிய தார்மீக
ஆதரவைப் பெறுவதற்கு பாதகமாக இருக்குமேயொழிய சாதகமாக இருக்காது. வெளிநாட்டு
அரசாங்கங்களை நிர்ப்பந்திக்கும் இந்த உலகத்தமிழரும் தமிழீழச்சங்கத்தினரும் ஏன் நெற்றிக்
கண்ணைத் திறப்பேன் எனக்கூறிய தேசியத்தலைவரை திறக்குமாறு நிர்ப்பந்தித்து இனப்பிரச்சனையை
தீர்க்க முயற்சிக்ககூடாது. மாத்தையா, யோகி, டோமினிக், தளையசிங்கம்சிவகுமார், போன்றவர்கள்
பச்சைத்துரோகிகளாகக் காட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டு வருசின்றனர். காட்டிக்கொடுப்பா?
தனித்தலைமை வெறியிலான சூழ்ச்சியா? வரலாற்றுப் பதிலுக்காக காத்திருப்போம். எது எப்படி
இருந்தாலும் இவர்கள் தமிழீழ மண்ணில், களத்தில் நின்று போராடி விழுப்புண் பெற்றவர்கள்.
இவர்களுக்கு மரணதண்டனை? ஆனால் விருதுகளுக்காக அலையும் முன்னாள் துரோகிகளுக்கும்,
சந்தர்ப்பவாதிகளுக்கும் மாலை மரியாதையா? உலகநாடுகளில் தமது சுயலாபத்திற்காக விடுதலைக்கு
ஆதரவுபோல் நடித்து, தூரநோக்கற்ற செயற்பாடுகளால் எமது இனத்திற்கு அவப்பெயரை உண்டாக்கும்
பச்சோந்திகளையும் துரோகிகளையும் இனங்கண்டு தூக்கியெறிவோம். ஒருசில தமிழர்களின்
சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கைகளால் தமிழீழ, கனேடிய, மற்றும் உலகநாட்டு மக்களின்
நல்லுறவில் ஏற்பட்ட கீறல்களுக்காக மன்னிப்புக்கோருவோம். பல்லினக்கலாச்சாரத்தை மதித்து
தமிழினக்கலாச்சாரத்தை வளர்க்கவும், 1990ம் ஆண்டிலிருந்து தமிழீழச்சங்கத்திற்கூடாக $4.3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மில்லியன் உதவி வழங்கிய ஒன்ராரியோமாநில, கனேடிய அரசுகளுக்கு நன்றி கூறுவோம். அவ் உதவிப்பணத்தில் பெருந்தொகையை சுருட்டிவிட்ட முன்னாள் துரோகப் பெருச்சாளிகளை கண்டிப்போம்.

## கடந்தகால அனுபவங்களிலிருந்து எதிகள் மட்டுமல்ல நாமும் கற்கவேண்டிய பாடம்

இனிய தமிழீழ மக்களே! கடந்த கால அனுபவங்களிலிருந்து எதிரிகள் மட்டும் தான் பாடம் படிக்க வேண்டுமா? நாமும் தான் பாடம் படிக்கவேண்டும். அன்று ஸ்ரீலங்கா ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக மதில்களில் சுலோகங்கள் எழுதுவது அரச பேருந்து வண்டிகளுக்கு கல்லெறிவதில் ஆரம்பித்த போராட்டம்தான், இன்று பொம்பர்களை சுட்டுவீழ்த்தும் நிலைக்கு வளர்ந்திருக்கின்றது. அன்றைய சிறு பொறி தான் இன்று காட்டுத்தீயை உருவாக்கியிருக்கின்றது. அடக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழும்பும் மக்கள் சக்தியை யாராலும் தடுக்க முடியாது. இந்த வரலாற்று அனுபவத்தை புரிந்து கொள்ளாது புலிகளும் மக்கள் விரோதிகளாக மாறிவருகின்றார்கள். யாழ்ப்பாணத்தை விட்டு யுத்தத்தில் பின்வாங்கி வெளியேறப் போகின்றோம் என புலிகளுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தும் மக்களுக்குச் சரியான முறையில் தெரிவிக்கப்படவில்லை. மக்களை வெளியேற்றத்திற்கு தயார்படுத்தவில்லை. மாறாக இராணுவம் இதோ வந்துவிட்டது! இதோ வந்துவிட்டது! என மக்களைப் பயபீதி கொள்ளவைத்து தாமே இராணுவம் அடிப்பது போல் ஷெல்களை மக்கள் குடியிருப்புகளுக்குள் அடித்து மக்களை பதட்டத்துடன் வெளியேற நிர்ப்பந்தித்தார்கள். உரியமுறையில் ஒருகால அவகாசம் கொடுத்து வெளியேற வேண்டும் என அறிவித்திருந்தால் மக்கள் தமது உடைகளையும் நகைகளையும் எடுத்துச் சென்று தமது கஷ்டங்களை ஓரளவு நிவர்த்தி செய்திருக்கலாம். கால அவகாசத்தின் பின்பு வெளியேறாதவர்கள் மீது நிர்ப்பந்தம் பிரயோகித்திருந்தால் ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். மாவீரர் குடும்பங்களின் ஆடுகள், மாடுகள் புலிகளின் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டன. ஊனமுற்றவர்கள்,வயோதிபர்கள் கைவிடப்பட்ட பிரதேசத்தில் நிர்கதியாக்கப்பட்டனர். கர்பிணிகளோ நீண்டதூரம் நடந்து சென்றனர். இது புலிகள் ஓர் ஒழுங்கான, கட்டுக்கோப்பான தலைமையில் இல்லை என்பதைக் காட்ட வில்லையா? இவ்வாறு மக்களை வெளியேறுமாறு நிர்ப்பந்தித்து விட்டு மக்களின் உடமைகளையும் சொத்துக்களையும் கொள்ளையடித்தார்கள் புலிகள். யாழ்ப்பாணத்தில் தனது வீட்டு ஓட்டைக் கிளிநொச்சியில் தனக்கே விற்றார் புலிஉறுப்பினர் என்கிறார் ஒரு தமிழீழவாசி. இதனால் கோபாவேசம் கொண்ட மக்களைச் சாந்தப்படுத்த தமது வதைமுகாமில் இருந்த ஒருசில தமிழர்களை மண்டையில் போட்டுவிட்டு ஒடு திருடிய புலிகளுக்கு தண்டனை கொடுத்துவிட்டோம் என்கிறார் தேசியத்தலைவர். இவ்வாறு இன்று அடக்குமுறையாளர்களாக மாறிவருகின்ற புலிகளுக்கு எதிராகவும் மக்கள் கிளர்ந்தெழ ஆரம்பித்து விட்டார்கள்.

சாவகச்சேரியில் அகதிகளாக இடம்பெயர்ந்து உண்ணஉணவின்மையால் மரம்வெட்டிச் சம்பாதிக்க முயற்சித்த மக்களைத் துன்புறுத்தியதால் புலிப்பொலிசார் இருவர் வெட்டிக்கொலை।

புலிகளின் பாஸ்அலுவலகங்கள் இரவில் மக்களின் கல்லெறிக்குள்ளாகின்றன।
சாவகச்சேரி தபால்கந்தோர் வீதியில் புலிஉறுப்பினர் ஐவர் மக்களால் அடித்துக்கொலை।

இடம்பெயர்ந்து நீண்டதூரம் கால்நடையாக வந்த மக்கள் சனநெரிவிற்குள் புலிப்பொலிசாரை இழுத்து விழ்த்தி மிதித்து தமது கோபாவேசத்தை வெளிப்படுத்தினர்।

இடம்பெயருங்கள் என்ற புலிகளின் கட்டளையை எதிர்த்து வடமராட்சி மக்கள் ஊர்வலம்।

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்தோரின் கார்களில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கர்கள் கிழிப்பு।
வீடுகளில் தேசியத்தலைவரின் படங்கள் அகற்றல்।

தென்மராட்சிப்பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு புலிகளின் கட்டளை தமிழீழ மக்களால் நிராகரிப்பு. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்வதை விட, இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்குள் செல்வது மேல் ஏன் எண்ணக்கூடிய அளவுக்கு மோசமாகிவிட்ட சூழ்நிலை।

புலிகள் பழிவாங்கி தாக்குவார்களோவென யாழ்திரும்பிய மக்கள் பயபீதிகொள்கிறார்கள் என பிரிட்டிஷ் டாக்டர் தெரிவிப்பு।

இவை சிறு தீப்பொறி போல் இருக்கலாம், ஆனால் எதிர்காலத்தில் இது பெரும் காட்டுத்தீயை உருவாக்கும் என்பதை புலிகள் புரிந்து கொள்ளவேண்டும். மேற்குலகநாடுகளில் தவறு செய்த அரசியல்தலைவர்கள், தோல்விகண்ட அரசியல்தலைவர்கள், பகிரங்கமன்னிப்பு கோருகின்றார்கள், பதவி விலகுகின்றார்கள். வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்பதற்காக கூட பதவி விலகும் ஜனநாயக சூழ்நிலையை தமிழீழமக்கள் அறியாது விட்டாலும், புலம் பெயர்ந்த தமிழர்களாகிய நீங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்